**Statement by Salma**

ஒரு படைப்பாளி எப்போதும் தனது கவனத்தை அக்கறையை இந்த சமூகத்தின் மீதே வைத்திருக்கிறான்.அந்த கவனம் என்பது ஆழமான அர்த்தம் பொதிந்ததொன்று. அந்த ஆழமான அர்த்தம் எதுவாக இருக்கிறது என்றால் ஜனநாயகத்தை வலிமைப்படுத்துவதும் இந்த சமூகத்தை ஏற்ற தாழ்வுன்றி சமப்படுத்துவதாகவும் இருக்கிறது. அப்படி வலுப்படுத்தப்படுகிற ஜனநாயகத்தின் வழியே தான் படைப்பாளிகளின் சிந்தனையை உறுதி செய்யக்கூடியதாகிறது.

பெருமாள் முருகனது சிந்தனையின் மீதான தாக்குதலையும், கவுரி லங்கேஷ், கல்புர்கி, தபோல்கர், பன்சாரே போன்ற படைப்பாளிகள் மீதான அழித்தொழித்தலையும் உதாரணங்கள் என காணலாம். அவர்கள் உருவாக்க நினைக்கும் அச்சுறுத்தல் , ஏனையவர்களுக்கான “செய்தியை” முன் வைக்கிறது. இந்த ஆபத்தென்பது மாற்று சிந்தனைகளே இல்லாத ஒரு நிலையை நோக்கி இந்த நாட்டை இந்த சமூகத்தை கொண்டு செல்லும் அபாயமாக மாறி நம் முன்பாக இருக்கிறது.

பெருமாள் முருகனது சிந்தனையின் மீதான தாக்குதலையும், கவுரி லங்கேஷ், கல்புர்கி, தபோல்கர், பன்சாரே போன்ற படைப்பாளிகள் மீதான அழித்தொழித்தலையும் உதாரணங்கள் என காணலாம். அவர்கள் உருவாக்க நினைக்கும் அச்சுறுத்தல் , ஏனையவர்களுக்கான “செய்தியை” முன் வைக்கிறது.
இந்த ஆபத்தென்பது மாற்று சிந்தனைகளே இல்லாத ஒரு நிலையை நோக்கி இந்த நாட்டை இந்த சமூகத்தை கொண்டு செல்லும் அபாயமாக மாறி நம் முன்பாக இருக்கிறது.

ஒரு மொழி ஒரு சமூகம் ஒரே சிந்தனை என்கிற பாசிசத்திலிருந்து இந்த நாட்டை காப்பது இந்த தேர்தலில் மிக முக்கியமான தொரு பணி. இந்த தேர்தல் ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் ஒரு தேர்தல்.

ஒரு படைப்பாளி எதை எழுத வேண்டும் சிந்திக்க வேண்டும் என்று கட்டளையிட முயல்கிறது இந்த அரசு. அந்த நிர்பந்தத்தை உருவாக்கும் தகுதி எந்த ஒரு ஆட்சியாளர்களுக்கும் இருக்க முடியாது என்பதை உலக வரலாறு நிரூபித்திருக்கிறது.

ஒரு எழுத்தாளராக சமீப காலங்களில் எனக்குள் மாற்று சிந்தனையை முன் வைப்பதற்கான வெளியை நான் இழந்திருப்பதாக உணர்கிறேன். அது என்னை மிகவும் துன்புறுத்தக்கூடியதாக இருக்கிறது.

இது படைப்பாளியின் எல்லையற்ற சுதந்திரத்தை மீட்டெடுக்கிற தேர்தல். சிந்தனைத்தளங்களை முடக்க முயல்கிற பாசிச வலதுசாரித்துவ சக்திகளை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கான ஒரு அரசியல் செயல்பாடு. அது ஒவ்வொரு எழுத்தாளருக்கும் முன் நிற்கும் கடமை, பொறுப்பும்கூட. இந்த தருணத்தில் நாம் இணைந்திருப்பது காலத்தின் கட்டாயம். ஏனைய எந்த தேர்தலையும் விட இந்த தேர்தலும் இந்த ஆட்சியின் முடிவும் நம்மை போன்றவர்களால் முன்னெடுக்கப்பட்ட வேண்டும்.